திரு. கே. விநாயகம் : குறிப்பு என்னிடத்தில் இல்லையென்று சொன்னால், வேறு எந்த விளக்கத்தை எதிர்பார்க்க முடியும் என்ற சந்தேகம் வருகிறது. இது ஒன் வே டிராபிக்காக இருக்கிறது. போக்கு வரத்தை ஒரு பகுதி நிறுத்திவிட்டு ஒரு பகுதியைப் போகச் சொல்ல வேண்டியிருக்கிறது. இதனால் அரை மணி நேரத்திற்கு மேல் ஆகிறது. இந்த அனுபவம் அமைச்சருக்கு ஏற்பட்டிருக்கிறதா ? அதன் மீது நடவடிக்கை எடுத்து அதற்காக ஒரு எஸ்டிமேட் தயார் செய்வதற்கு ஏன் முன்வரவில்லை ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : என்னைவிட கனம் உறுப்பினர் அவர்களுக்கு எக்ஸ்பீரியன்ஸ் அதிகம் ஏற்பட்டிருக்கும். இது பற்றி மறு பரிசீலனை செய்து நிதி நிலைமை இடம் தருமானால் நடவடிக்கை எடுக்கலாம்.

அந்தியூர்—கொள்ளேகால் சாலை.

* 262—வினா : திரு. ஏ. எம். இராஜா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

பர்கூர், தட்டகாவி ஆகியவற்றின் வழியாக அந்தியூரிலிருந்து கொள்ளேகால் செல்லும் சாலையை மேம்படுத்தும் செயற் குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : பவானி-செல்லம்பாளையம் சாலையின் 12/0 மைல் முதல் 19/2 மைல் வரை அமைந்துள்ள அந்தியூர் செல்லம்பாளையம் சாலைப் பகுதி தார் போடப்பட்டு ஏற்கனவே மேம்படுத்தப் பட்டுள்ளது. செல்லம்பாளையத்திலிருந்து கொள்ளேகாலம் வரையுள்ள சாலையின் எஞ்சிய பகுதியை அதே போன்று மேம்படுத்தும் பணியை நிறைவேற்றுவதற்கான செயற் குறிப்புகளை அரசாங்கம் ஆலோசித்து வருகிறது.

வேலூர் மத்திய சிறை முன்னாள் கண்காணிப்பாளர்.

*263 வினா.—திரு. வி. கே. கோதண்டராமன் : மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மத்திய சிறை சூப்பிரெண்டெண்டாக இருந்த ஒருவர் பல பொருள்களைத் தவறான முறையில் விற்பனை செய்தார் என்பதற்காக 1966-வது ஆண்டில் மாநில சிறை அதிகாரியின் மூலமாகவும், 1967-வது ஆண்டில் விஜிலென்ஸ் பார்ட்டியார் மூலமாகவும் விசாரணை நடைபெற்றது உண்மையா ?

(இ) அப்படியானால் அதன் விவரமென்ன ?

(உ) அதன்மீது நடவடிக்கை எடுக்காமல் காலம் கடத்தி வருவதற்கான காரணம் என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஆம்

(இ) இது நடுவர் மன்றத்தின் விசாரணையில் இருப்பதால் விவரங்களை வெளியிடுவதற்கில்லை.

(உ) கண்காணிப்பு—லஞ்ச ஒழிப்பு இயக்குனர் அலுவலகத்திலிருந்து லஞ்ச ஒழிப்பு ஆணையர் மூலம் வந்த விரிவான அறிக்கை மீது அரசாங்கம் உடனடியாக, தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது. இன்று இவ்வழக்கு விசாரணை செய்யப்படுவதற்காக, சென்னையிலுள்ள ஒழுங்கு நடவடிக்கை நடுவர் மன்றத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது. குற்றம் சாட்டப்பட்ட அதிகாரி மீது விசாரணை நடந்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், விவரம் சொல்வதற்கில்லை என்று சொன்னாலும்கூட இது சம்பந்தமாக பல பேர்கள் மாற்றப் பட்டிருக்கிறார்களா ? அப்படி மாற்றிவிட்டதற்குப் பிறகும் விசாரணை காலதாமதம் ஆகக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் மற்றவர்களை

அனுமதி சாதகமான முறையிலே செய்ய பல சூழ்நிலைகள் ஏற்பட்டுவரு கின்றன என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? ஆகவே, உடனடி யாக விசாரணை செய்து தக்க நடவடிக்கை எடுக்க உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விசாரணை சரியான முறையில் நடைபெற வேண்டுமென்பதற்க்காக சில அதிகாரிகள் மாற்றப்பட்டிருப்பது உண்மைதான். இதனால் விரைவில் விசாரணை முடிவடையும் என்று நம்புகிறோம். விசாரணையை சீக்கிரம் முடிக்க வேண்டும் என்று நாம் அவர்களை நிர்ப்பந்திப்பதற்கு இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விசாரணையை அங்கே பணிபுரியக் கூடிய ஊழியர்களிடத்தில் மட்டிலுமே செய்யப்படுகிறதா ? இது சம்பந்தமாக பொதுமக்களிடத்திலேயும் விசாரணை நடத்தும் ஏற்பாடு அரசாங்கத்திற்கு உண்டா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, விசாரணை விவரங்களை வெளியிடுவதற்கில்லையென்று நான் முதலிலேயே சொன்னேன்.

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் தண்ணீர் தட்டுப்பாடு.

*264 வினா.—**திரு. என். கிட்டப்பா :** மாண்புமிகு தொழிலாளர் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மத்திய சிறையில் கோடைக்காலங்களில் குடி தண்ணீர் பற்றாக் குறையை சமாளிக்க அரசு எடுத்துக் கொண்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மேல்நிலை நீர்த்தொட்டி ஒன்று கட்டப்பட்டு பயனுக்குக் கொண்டுவரப்பட்டது ; கிணறு ஆழப்படுத்தப் பட்டது ; புதிய மேல் நிலை நீர்த்தொட்டியிலிருந்து பல கட்டிடப் பகுதி களுக்குக் குழாய்கள் போடப்பட்டு நீர் எடுத்துச் சென்று வழங்க ஏற்பாடு செய்யப்பட்டது. இவை காரணமாக 1967 இடைப்பகுதி முதல் திருச்சி ராப்பள்ளி மத்தியச் சிறைச்சாலையில் குடிதண்ணீர் வசதி கணிசமான அளவு சீர்பட்டுள்ளது.

திரு. என். கிட்டப்பா : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி மத்திய சிறையில் 1967-க்கு முன்னால், கைதிகள் எல்லாம் வாரத்திற்கு ஒரு முறை குளிக்கக்கூடிய நிலைமையில் தண்ணீர் பற்றாக்குறை இருந்து வந்தது. தற்போதுள்ள புதிய சர்க்கார் அந்த நிலைமையை மாற்றி யமைத்திருக்கிறதா ? மேலும், குடிதண்ணீர் திருச்சி நகராட்சியிலிருந்து வேன்களின் மூலம் கொண்டுவரப்பட்டது. தற்போது அந்த நிலை மையை புதிய சர்க்கார் மாற்றியமைத்திருக்கிறதா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, மேல்நிலை நீர்த்தொட்டி அமைக்கப்பட்ட பிறகு, குடிதண்ணீர் நிலைமை சீராகியிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சி ராப்பள்ளி மத்திய சிறையில் குடிதண்ணீர் பற்றாக்குறையாக இருக்கிற காரணத்தால், திருச்சிராப்பள்ளி நகராட்சியிலிருந்து வேன் ஒன்றுக்கு எட்டு ரூபாய் வீதம் செலவு செய்து தண்ணீர் வாங்கிக் கொண்டிருக்கிறார் கள். ஆகவே, இந்தப் பணத்தைக் கொண்டாவது அங்குள்ள கிணற்றை ஆழப்படுத்தி, குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்க்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் சேகரித்துத் தரப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன் : பேரவைத் தலைவர் அவர்களே, சிறையிலே இருக்கின்ற கைதிகளுக்குச் சோறு, தண்ணீர் கிடைக்கவில்லை யென்றால் அவர்கள் திருடியும் சாப்பிட முடியாத நிலைமை இருந்த